செ.வெ.எண்: 35 நாள்: 16.09.2016

**பத்திரிகைச்செய்தி**

UYEGP/PMEGP/NEEDS திட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான 5% வைப்புத் தொகை வழங்குதல் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான தமிழக அரசு மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காக பல்வேறு நலத்திட்ட உதவிகளை செயல்படுத்தி வருகிறது. அவர்கள் சுயமாக தொழில்புரிந்து வருவாய் ஈட்ட மாற்றுத்திறனாளிகளின் நலத்துறை மூலம் கடனுதவி வழங்கப்பட்டு வருவதோடு மட்டுமல்லாமல் பிற துறைகளாலும் மாற்றுத்திறனாளிகளுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. அதில் தொழில் வணிகத்துறையின் மூலமாக மாவட்ட தொழில் மையமங்கள் மூலம் படித்த வேலையில்லா இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (UYEGP), பாரதப்பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP) மற்றும் புதிய தொழில்முனைவோர் , தொழில் நிறுவன மேம்பாட்டுத்திட்டம் (NEEDS) ஆகிய கடனுதவி திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு அதில் கடனுதவி பெறுபவருக்கு UYEGP, NEEDS திட்ட மதிப்பீட்டில் 25% மானியமும் மற்றும் PMEGP,திட்டத்தில் நகர்ப்புறத்தில் வசிப்பவர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 25%ம் மற்றும் கிராமப்புறங்களில் வசிப்பவர்களுக்கு திட்ட மதிப்பீட்டில் 35% மானியமும் வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்டங்களில் கடன் பெற விரும்பும் தொழில்முனைவோர் முதலீட்டுத் தொகை பொதுப்பிரிவினருக்கு திட்ட மதிப்பீட்டில் 10%மும் மற்றவர்களுக்கு 5%மும் அவர்களால் செலுத்தப்பட வேண்டும். இத்திட்டங்களில் கடன் பெறுபவர்கள் மாற்றுத்திறனாளிகளாக இருப்பின் அவர்கள் செலுத்த வேண்டிய மேற்குறிப்பிட்ட முதலீட்டு தொகையை மாற்றுத்திறனாளிகள் நலத்துறையால் அவர்களுக்கு செலுத்தப்படுகிறது. எனவே 18 வயதிற்கு மேற்பட்ட 45 வயதிற்குட்பட்ட மாற்றுத்திறனாளிகள் UYEGP/PMEGP திட்டத்திற்கும் , 25 வயதிற்கு மேற்பட்ட 45 வயதிற்குட்டடோர் NEEDS திட்டத்திலும் கடனுதவி பெற்று பயனடையலாம். இத்திட்டங்களில் கடனுதவி பெற விரும்பும் மாற்றுத்திறனாளிகள் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மாவட்ட தொழில் மைய அலுவலகத்தையோ அல்லது புதிய பேருந்து நிலையம் அருகில் அமைந்துள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், புதுக்கோட்டையை அணுகி கடனுதவிக்கான ஆலோசனைகளை பெற்றிடலாம். UYEGP திட்டத்திற்கு 21.09.2016 வரை விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது. மேலும் PMEGP திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் www.kviconline.gov.in மற்றும் NEEDS திட்டத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் www.msmeonline.tn.gov.in/needs என்ற இணையதளத்திலும் விண்ணப்பித்து பயனடையலாம்

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**